

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව

வளிமண்டலவியல் திணைக்களம்

DEPARTMENT OF METEOROLOGY

2022

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த சாத்திய அறிக்கை

Annual Performance Report

முன்னேற்ற அறிக்கை

2022

வளிமண்டலவியல் திணைக்களம்

செலவின வகை இல. 304

2022 இற்கான முன்னேற்ற அறிக்கை

நிறுவனத்தின் பெயர் - வளிமண்டலவியல் திணைக்களம்

செலவின வகை இல. 304

உள்ளடக்கம் **பக்க எண்**

பிரிவு 01 1

வளிமண்டலவியல் திணைக்களம் 1

1.1 அறிமுகம் 2

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள் 2

1.3 பிரதான பணிகள் 2

1.4 நிறுவனக் கட்டமைப்பு 4

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகளின் கீழ் அமைந்த பிராந்திய அலுவலகங்கள் 5

1.6 திணைக்களத்திலுள்ள நிதி 8

1.7 வெளிநாட்டு உதவிகளுடனான செயற்றிட்டங்கள் 8

பிரிவு 02 11

முன்னேற்றமும் நோக்கும் 11

2.1 வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் பிரிவின் முன்னேற்றம் 13

2.2 ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவும் காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையமும் 15

2.3 மழைவீழ்ச்சி, தரவு, காலநிலையியல், உபகரணத் தரவு செயன்முறையும் பேணிப் பாதுகாத்தலும் (கணினிமயப்படுத்தப்பட்ட) பிரிவுகளதும் வெளியக அலுவலகங்களினதும் முன்னேற்றம் 17

2.4 சவால்கள் 21

2.5 எதிர்கால இலக்குகள் 22

பிரிவு 03 25

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாடுகள் 25

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று 27

3.2 நிதி நிலைமைக் கூற்று 28

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று 29

3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள் 30

3.5 வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள் 30

3.6 ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளைப் பயன்படுத்திய செயற்பாடுகள் 30

3.7 FR 208 (நி.ஒ 208) இற்கிணங்க, வேறு ஒரு அமைச்சு / திணைக்களத்தின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களம் / பிரதேச செயலகம் / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள் 30

3.8 நிதி அல்லாத சொத்துகளை அறிக்கையிடும் செயற்பாடுகள் 31

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை 31

பிரிவு 04 33

செயற்பாட்டு குறிகாட்டிகள் 33

4.1 – நிறுவனத்தின் செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க) 35

பிரிவு 05 37

செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க) 37

5.1 பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணல் 39

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடைவுகளும் சவால்களும் 41

பிரிவு 06 49

மனித வள அபிவிருத்தி 49

6.1 ஆளணி முகாமைத்துவம் 51

6.2 மனித வளம் மேலதிகமாக அல்லது பற்றாக்குறையாக இருப்பதால் நிறுவனத்தின் செயற்பாட்டில் ஏற்படும் தாக்கம் 51

6.3 மனித வள அபிவிருத்தி 52

பிரிவு 07 57

அனுசரித்துப் (இணங்கிப்) போதல் தொடர்பான அறிக்கை 57

பிரிவு 01

வளிமண்டலவியல் திணைக்களம்

1.1 அறிமுகம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் செயற்படும் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஆரம்பத்தை எடுத்துப் பாரத்தால், அது 19ம் நூற்றாண்டிலிருந்தான நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. இலங்கையில் வளிமண்டலவியல் பரமாணங்களின் முறையான அவதானிப்பானது 1867 ஆம் ஆண்டில் நில அளவைத் திணைக்களத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் 1909 ஆம் ஆண்டில் கொழும்பு அவதானிப்பகம் என்ற பெயரிலான வேறான ஒரு நிறுவனம் தற்போது வளிமண்டலவியல் திணைக்களம் அமைந்திருக்கும் வளாகத்தில் தாபிக்கப்பட்டது. கொழும்பு அவதானிப்பகமானது வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளை வழங்குவதைப் பிரதான நோக்கமாகக் கொண்ட ஒரு சுயாதீனமான அரச திணைக்களமாக 1948 ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது. தற்போது, வளிமண்டலவியல் திணைக்களமானது வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியலுடன் தொடர்பான சேவைகளை வழங்குவதற்கான அரசாங்கத்தின் சட்டபூர்வமான அமைப்பாக அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் கீழ் செயற்படுகின்றது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, பணிக்கூற்று மற்றும் இலக்குகள்

நோக்கு

வானிலை மற்றும் காலநிலை தொடர்பான சேவைகளுடன் தொடர்பான தனிச்சிறப்பான நிலையமாக உருவெடுத்தல்

பணிக்கூற்று

பொதுத்துறை மற்றும் தனியார் துறையிலுள்ள நிறுவனங்களுக்கும் பொதுமக்களுக்கும் வளிமண்டலவியல், வான்சார் வானிலையியல், கடல்சார் வானிலையியல், நீரியல் வானிலையியல், விவசாய வானிலையியல் மற்றும் காலநிலையியல் தொடர்பான சேவைகளையும் வரையறுக்கப்பட்ட அளவிலான வானியல் சேவைகளையும் தேசிய நலன்களுடனும் சர்வதேச நியமங்களுடனும் இசைந்த வகையில் வழங்குதல்.

நோக்கங்கள்

- பல்வேறு புலங்களின் மீதான தாக்கத்தின் அடிப்படையில் அதிக துல்லியமான நேரம் மற்றும் இடங்களுடன் கூடிய வளிமண்டலவியல் எச்சரிக்கைகளையும் எதிர்வுகூறல்களையும் வழங்குதல்.
- விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வேறான பருவகால எதிர்வுகூறல்களும் அவ்வாறான எதிர்வுகூறல்களின் முறையான இற்றைப்படுத்தலும்
- அரசாங்கத்தின் நீண்டகால அபிவிருத்தி நடவடிக்கைகளை வசதிப்படுத்தும் நோக்கில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான முறையான திட்டமிடலுக்கு அவசியமான காலநிலையியல் எதிர்வுகூறல்களின் நம்பகத்தன்மையை மேம்படுத்தல்
- சர்வதேச நியமங்களுக்கேற்ற வகையில் திணைக்களத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல்

1.3 பிரதான பணிகள்

- பொதுமக்களுக்கும் விவசாயம், சக்தி, மீன்பிடி, கப்பற்றுறை, காப்புறுதி மற்றும் ஏனைய ஆர்வமுள்ள துறையினருக்கும் வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளை வழங்குதல்

- மோசமான வானிலை (சூறாவளி, பலத்த மழைவீழ்ச்சி, மின்னல் தாக்கங்கள், கடும் காற்று போன்றவை அடங்கலாக) மற்றும் சுனாமி குறித்த எச்சரிக்கைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்

- வான்வழி வானிலையியல் சேவைகளை வழங்குதல்

- காலநிலையியல் தரவுத்தளங்களைப் பேணுதல்

- தேசிய அபிவிருத்தி மற்றும் ஆய்வுத் தேவைகளுக்காக வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளையும் தரவுகளையும் வழங்குதல்

- வளிமண்டலவியல், காலநிலையியல் மற்றும் காலநிலை மாற்றங்கள் மற்றும் இணைந்த பாட விடயங்களில் கல்வியையும் ஆய்வுகளையும் ஊக்கப்படுத்தல்

- வானிலை, காலநிலை மற்றும் காலநிலை மாற்றங்கள் ஆகிய கருப்பொருட்களில் பொதுமக்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்தலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தலும்

- பாடசாலை மாணவர்கள், கொள்கை மற்றும் தீர்மான வகுப்பாளர்கள் உட்பட ஆர்வமுள்ள பிரிவினருக்கான கல்வி மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகளையும் செயலமர்வுகளையும் ஒழுங்கு செய்தலும் அவற்றுக்குப் பங்களிப்புச் செய்தலும்


- கண்காட்சிகளில் காட்சிப்பொருட்கள் மற்றும் வளவாளர்கள் மூலம் பங்களிப்புச் செய்தல்

- கோரிக்கைகளுக்கிணங்க விசேடமான வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் சேவைகளை வழங்குதல்

- வரையறுக்கப்பட்ட அளவிலான வானியல் (சூரியன், சந்திரன், கோள்கள் மற்றும் அலை சார்ந்த) சேவைகளையும் புவிக்காந்தவியல் சேவைகளையும் வழங்குதல்

1.4 நிறுவனக் கட்டமைப்பு

நிறுவனக் கட்டமைப்பு - வளிமண்டலவியல் திணைக்களம்



1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகளின் கீழ் அமைந்த பிராந்திய அலுவலகங்கள்

1.5.1 திணைக்களத்தின் கீழுள்ள பிரதான பிரிவுகள்

தொடர் இல.	பிரதான பிரிவு	உப பிரிவு	பொறுப்புகள்
01	பிராந்திய அலுவலகங்களும் காலநிலை மாற்றக் கற்றலும்	காலநிலைப் பிரிவு	பிராந்திய நிலையங்களின் ஒருங்கிணைப்பும் முகாமைத்துவமும், வளிமண்டலவியல் தரவுகளின் தரக் கட்டுப்பாடும் காப்பும்
		தரவுப் பிரிவு	தரக் கட்டுப்பாடு, தன்னியக்கப் பதிவு வளிமண்டலவியல் உபகரணங்கள் மூலமான தரவுகளை செயன்முறைப் படுத்தலும் காப்பும்
		விவசாய வானிலையியல் பிரிவு	விவசாய வானிலையியல் வலையமைப்பின் ஒருங்கிணைப்பு, விவசாய வானிலையியல் தரவுகளின் தரக்கட்டுப்பாடும் பேணிக் காப்பும்
		ஆய்வுப் பிரிவு	வளிமண்டலவியல் மற்றும் காலநிலையியல் ஆய்வுகளை மேற்கொள்ளல்
		காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையம்	காலநிலை மாற்றங்களுடன் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்
		விமானநிலைய வளிமண்டலவியல் நிலையங்கள்	சர்வதேச விமானப் போக்குவரத்து நிறுவனத்தினதும் (ICAO) உலக வளிமண்டலவியல் நிறுவனத்தினதும் (WMO) நியமங்களுக்கும் விதிமுறைகளுக்குமிணங்க வளிமண்டலவியல் தரவுகள் / தகவல்களை வழங்குதல்
		NWP	எண்ணிம அடிப்படையிலான வானிலை முன்னறிவிப்புகளை வழங்குதல், எண்ணிம வானிலை முன்னறிவிப்புகளை மேம்படுத்துதல், வளிமண்டலவியல் திணைக்களத்தின் தேசிய வானிலை நிலையம் போன்ற திணைக்களங்களுக்கும் விவசாய வானிலையியல் பிரிவுக்கும் எண்ணிம அடிப்படையிலான வானிலை முன்னறிவிப்புகளை வழங்குதல், வானிலை முன்னறிவிப்புகளுக்கான வழிகாட்டல்களை மேம்படுத்துதல் மற்றும் அவற்றை தேசிய வானிலை

			நிலையத்திற்கு வழங்குதல், தேவையைப் பொறுத்து வெளியகப் பிரிவினருக்கு எண்ணிம அடிப்படையிலான வானிலை முன்னறிவிப்புகளை வழங்குதல்,
02	திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி	திட்டமிடல் மற்றும் செயற்றிட்டப் பிரிவு	திட்டமிடல் அபிவிருத்தி, முன்னேற்றக் கண்காணிப்பு, வருடாந்த நிர்வாக மற்றும் செயற்பாட்டு அறிக்கை, நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) ஒருங்கிணைத்தலும் கண்காணித்தலும்
		தரவு செயன்முறை மற்றும் பேணிப் பாதுகாத்தல் பிரிவு	கணினி வடிவில் வளிமண்டலவியல் தரவுகளின் தரக்கட்டுப்பாடும் காப்பும், காலநிலைத் தரவுத்தளத்தைப் பேணுதல், வெளியகப் பிரிவினருக்கு வளிமண்டலவியல் தரவுகளை வழங்குதல், திணைக்களத்தின் இணையத்தளத்தைப் பேணுதலும் அதை நவீனமயப்படுத்தலும்.
		பதிவு அறைகள்	பதிவு அறைகளை முகாமை செய்தல்
		போக்குவரத்துப் பிரிவு	வாகனங்களைப் பராமரித்தலும் போக்குவரத்து தொடர்பான செயற்பாடுகளும்
03	வானிலை முன்னறிவிப்பு மற்றும் தீர்மானத்திற்கான ஆதரவு	தேசிய வளிமண்டலவியல் மற்றும் முன்னெச்சரிக்கை நிலையம்	வளிமண்டலவியல் தரவுகளை செயன்முறைப்படுத்தலும் ஆய்வுசெய்தலும், வானிலை முன்னறிவிப்பும் அதைப் பரப்புதலும், தேசிய சுனாமி மற்றும் வானிலை இடர்களுக்கான முன்னெச்சரிக்கை நிலையமாகச் செயற்படுதல்
		தொடர்பாடல் பிரிவு மற்றும் கடல்சார் எதிர்வுகூறல்கள்	வளிமண்டலவியல் தரவுகள் / அவதானிப்புகளைப் பரிமாறிக் கொள்ளுதல், வானிலை முன்னறிவிப்புகளையும் முன்னெச்சரிக்கைகளையும் பரப்புதல்
		வானிலை முன்னறிவிப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவம்	வானிலை முன்னறிவிப்பு, தாக்கத்தை அடிப்படையாகக் கொண்ட வானிலை முன்னறிவிப்பு, அனர்த்த முகாமைத்துவம் மற்றும் சர்வதேச அனர்த்தம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் வினவல்களுக்கான மின்னல் தாக்கங்களின் ஆய்வு ஒத்துழைப்பிற்கான நிலையம்
04	பயிற்சி மற்றும் JICA	உபகரணப் பிரிவு	பாரம்பரிய வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும்

			பராமரிப்பும், தன்னியக்க வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும் பராமரிப்பும், வெளியக பிரிவினரின் கோரிக்கைக்கிணங்க அவர்களின் வளிமண்டலவியல் உபகரணங்களின் அளவு பொறித்தலும் பராமரிப்பும் மற்றும் கண்காட்சிகளில் மரவேலை மற்றும் தொழில்நுட்ப விடயங்களில் உதவி புரிதல்
		மழைவீழ்ச்சிப் பிரிவு	அனைத்து மழைவீழ்ச்சி நிலையங்களின் ஒருங்கிணைப்பும் கண்காணிப்பும், புதிய மழைவீழ்ச்சி நிலையங்களைத் தாபித்தல், மழைவீழ்ச்சியை அளவிடுவதற்கான தன்னார்வ அவதானிப்பாளர்களைப் பயிற்றுவித்தல்
		JICA செயற்றிட்டங்கள்	டொப்ளர் வானிலை ரேடார் வலையமைப்பு மற்றும் இயலளவு விருத்தி JICA செயற்றிட்டம்
		ரேடார்	மேல் வளிமண்டல அவதானிப்புகளும் அத் தரவுகளைப் பேணிப் பாதுகாப்பதும்
		மின்னியல் மற்றும் இலத்திரனியல் பராமரிப்புப் பிரிவு	மின்னியல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தமும் பராமரிப்பும், தன்னியக்க வானிலைத் தொகுதி மற்றும் செய்மதித் தரவு பெற்றுக்கொள்ளும் தொகுதியின் பராமரிப்பு
		பயிற்சிப் பிரிவு	பயிற்சி வழங்குதலும் திணைக்கள மற்றும் தடைதாண்டல் பரீட்சைகளை நடாத்துதலும்.
		விழிப்புணர்வுப் பிரிவு	திணைக்களத்திற்கு விஜயம் செய்யும் மாணவர்களுக்கு வானிலை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல். வேறு நிறுவனங்களிலிருந்து திணைக்களத்திற்கு விஜயம் செய்வோருக்கு தேவையான ஒழுங்கமைப்புகளை மேற்கொள்ளல். வெளியகப் பிரிவினரின் வேண்டுகோள்களுக்கிணங்க வானிலை தொடர்பான நிகழ்ச்சிகளை நடாத்துதல். வானிலை தொடர்பான தகவல்கள், வளங்களை வழங்குதல்
05	நிர்வாகம் மற்றும் நிதி	தாபனப் பிரிவு	தாபனத்துடன் தொடர்பான ஊழியர்களின் செயற்பாடுகள்

		நிதிப் பிரிவு	நிதி தொடர்பான செயற்பாடுகள்
		கொள்வனவுப் பிரிவு	கொள்வனவு, களஞ்சியப்படுத்தல் மற்றும் வழங்கல்
		போக்குவரத்துப் பிரிவு	வாகனங்களைப் பராமரித்தலும் போக்குவரத்து தொடர்பான செயற்பாடுகளும்
		களஞ்சியம்	திரவியங்களைக் களஞ்சியப்படுத்தலும் கையாளலும், இருப்புப் பதிவுகளைப் பேணுதல்
		பொது	பொது நிர்வாகம்
		வழங்கல்கள்	வழங்கல்களும் நலன்புரியும்
06	உள்ளகக் கணக்காய்வு	உள்ளகக் கணக்காய்வு	உள்ளகக் கணக்காய்வுத் திட்டம், உள்ளகக் கணக்காய்வுகள் மற்றும் கணக்காய்வு வினவல்கள்

1.5.2 திணைக்களத்தின் கீழுள்ள பிராந்திய அலுவலகங்கள்

கட்டுநாயக்க, மத்தளை, இரத்மலானை, யாழ்ப்பாணம், அநுராதபுரம், பதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, கட்டுகஸ்தோட்டை, குருநாகல், மஹாஇலுப்பல்லகம, மன்னார், மொனராகலை, நுவரெலியா, பொலன்னறுவை, பொத்துவில், புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, காலி, மற்றும் வவுனியா

1.6 திணைக்களத்திலுள்ள நிதி

திறைசேரியிடமிருந்து பெறப்படும் பணத்திலேயே திணைக்களம் இயங்குகின்றது. திணைக்களத்திடம் எவ்வித நிதியும் இல்லை.

1.7 வெளிநாட்டு உதவிகளுடனான செயற்றிட்டங்கள்

2022 இல் ஏனைய நாடுகள் / அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தான வெளிநாட்டு நன்கொடைகளின் விபரங்கள்

நன்கொடை வழங்கும் நாடு அல்லது நிறுவனம்	வெளி நாட்டு உதவி ஒப்பந்த இல.	விபரம் (நன்கொடை வழங்கப்பட்ட காரணம்)	பணம், பொருட்கள் அல்லது நேரடிக் கொடுப்பனவு	வெளிநாட்டு உதவியின் பெறுமதி		செயற்றிட்டக் காலம்
				ரூபா	*வெளிநாட்டு நாணயம்*	
WFP	WFP-CSP-	வானிலை முன்னறிவிப்பு கணிதவியல்	பொருட்கள்	36361348.05		5 வருடங்கள்

	2018 - 2022	மாதிரிகளை மேம்படுத்துவதற்காக கணினி ஒன்றை வழங்குதல்				
		கள உத்தியோகத்தர்களால் அவதானிக்கப்படும் வானிலைத் தரவுகளை வினைத்திறனுடன் தொடர்பாடல் செய்வதற்காக கணினி உபகரணங்களையும் தலைமை அலுவலகத்தில் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் தாக்கங்களைக் குறைப்பதற்காக மின்னல் பாதுகாப்புக் கருவிகளும் வழங்கப்பட்டமை	பணம்	41,53,276.60		5 வருடங்கள்
		திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட GIS/LINUX/Photoshop /Illustrator பயிற்சிக்கும் வெளியக	பணம்	290,000.00		5 வருடங்கள்

		அலுவலகங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்கான அடிப்படை கணினி பயிற்சி நெறிக்கும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை				
UNDP	GCF-CRIWMP	வானிலை எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்காக ஸ்கேனர், பிரிண்டர் ப்ரொஜக்டர் போன்ற கணனி உபகரணங்கள் வழங்கப்பட்டது.	ஒரு நேரடிக் கொடுப்பனவு	15,779,755.00		7 வருடங்கள்

- ECMWF – நடுத்தர வீச்சு வானிலை எதிர்வுகூறலுக்கான ஐரோப்பிய நிலையம்
- UNDP – ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம்
- DOM – வளிமண்டலவியல் திணைக்களம்
- World Bank – உலக வங்கி
- GCF – பசுமை காலநிலை நிதியம்
- AWS – தன்னியக்க வானிலைத் தொகுதிகள்
- CRIP- காலநிலை மீளெழல் மேம்பாட்டுச் செயற்றிட்டம்

பிரிவு 02

முன்னேற்றமும் நோக்கும்

குறிப்பிடத்தக்க அடைவுகள், சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

2.1 வளிமண்டலவியல் திணைக்களத்தின் எதிர்வுகூறல் பிரிவின் முன்னேற்றம்

- புதிய நிலையத்தில் தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் (NMC) கீழ் எண்ணிம வானிலை எதிர்வுகூறல் பிரிவைத் தாபித்தமை
- ECMWF மாதிரியின் மேம்படுத்தப்பட்ட உயர் தெளிவுத்திறன் கொண்ட எதிர்வுகூறல் தரவுகளைத் தரவிறக்கும் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டதுடன், அதன் மூலம் வளிமண்டலவியல் எதிர்வுகூறல்களை உருவாக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்கே, குறுகிய கால மற்றும் இடைக் கால வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள், விவசாயத் துறை, மீன்பிடி மற்றும் கடல்சார் நடவடிக்கைகள் மற்றும் வானியல் - வளிமண்டலவியல் நடவடிக்கைகளுக்கான எதிர்வுகூறல்கள் உள்ளடங்குகின்றன.
- இணையத்தளத்திற்கு ஒவ்வொரு 3 மணித்தியாலங்களுக்கு ஒரு தடவை தன்னிச்சையாக எதிர்வுகூறல் தரவுகளை அனுப்புவதற்கான பொறிமுறை உருவாக்கம்.
- ECMWF மற்றும் WRF மாதிரிகளின் எதிர்வுகூறல் துல்லியத்தன்மை ஆய்வு மேற்கொள்ளல்
- மழைவீழ்ச்சி இடை மதிப்பீடு முறைமைகளில் ஆய்வு மேற்கொள்வதனூடாக மேலும் துல்லியமான மழைவீழ்ச்சி இடை மதிப்பீடு முறைமைகளில் ஆய்வு மேற்கொள்ளல்
- வானிலை, இயற்கை ஆபத்துகள், பலமான காற்று, பலத்த மழைவீழ்ச்சி மற்றும் மின்னல் தாக்கங்களுக்கான எதிர்வுகூறல்கள், முன்னெச்சரிக்கைகள், எச்சரிக்கை அறிவிப்புகள் போன்றவை 2022 இல் முறையாக வழங்கப்படக் கூடியதாக அமைந்தது. இதற்கு, நடுத்தர வீச்சு வானிலை எதிர்வுகூறலுக்கான ஐரோப்பிய நிலையத்தின் (ECMWF) கணித மாதிரித் தரவுகள், அதி தீவிர மழைவீழ்ச்சிச் சுட்டி, மற்றும் ECMWF இன் விசேட உற்பத்திகளான அதி தீவிர காற்று வேகம் அதிகரிப்புச் சுட்டி, வளிமண்டலவியல் திணைக்களத்தின் கணிதரீதியான எதிர்வுகூறல் பிரிவால் தயாரிக்கப்பட்ட WRF கணித மாதிரித் தரவுகள், ஏனைய பூகோள கணித மாதிரிகளிலிருந்தான தரவுகள் மற்றும் தன்னியக்க மழைமானிகளிலிருந்து பெறப்படும் நிகழ்நேர மழைவீழ்ச்சித் தரவுகள் போன்றவை உதவியாக அமைந்தன.
- வளிமண்டலவியல் திணைக்களத்தால் முன் கணிப்புகள், பொதுமக்கள், அனர்த்த முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் மீன்பிடித் திணைக்களம் ஆகியவற்றிற்கு எச்சரிக்கைகளை முன்னதாகவே நேரத்துடன் வழங்கியதன் மூலம் உயிர் இழப்புகளைக் குறைக்கக் கூடியதாக அமைந்ததுடன், முன்னதாகவே தயார்நிலையில் இருந்ததன் காரணமாக அனர்த்த சேதங்களைக் குறைக்கக் கூடியதாக அமைந்தது.
- அனர்த்தத் தணிப்பு செயற்றிட்டம் ஒன்றின் ஊடாக வேர்ல்ட் விஷன் (World Vision) நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் 2 தன்னியக்க மழைமானிகளைப் பொருத்தியது.
- கட்டுநாயக்க வளிமண்டலவியல் அலுவலகத்தில் சுனாமி எச்சரிக்கை நிலையத்திற்கு ஒரு மாற்றீடாக சுனாமி கண்காணிப்புத் தொகுதியையும் எச்சரிக்கைத் தொகுதியையும் இற்றைப்படுத்தியமை.

- தரவு தொடர்பாடல் வலையமைப்பை நவீனமயப்படுத்தியமை
  நாடு முழுவதும் பரந்துள்ள பிராந்திய விஞ்ஞானபூர்வ வளிமண்டலவியல் அலுவலகங்களால் அவதானிக்கப்படும் வானிலைத் தரவுகள் ஒவ்வொரு நாளும் 3 மணிக்கு கொழும்பு வளிமண்டலவியல் அலுவலகத்தால் தொலைபேசி மூலமே பெற்றுக் கொள்ளப் படுகின்றது. இத் தரவுகள் பின்னர் கைகளாலேயே கணினி மயப்படுத்தப்படுகின்றன. எனவே, இதற்கு அதிக செலவும் மனித உழைப்பும் தேவைப்படுகின்றது. இத் தரவுகள் உலகம் முழுவதும் தொடர்பாடல் செய்யப்படுகின்றன என்பதால் மிகவும் முக்கியமானவையாகும். தரவுகளை வினைத்திறனாக மீட்டெடுத்தலும் பேணிப் பாதுகாத்தலும் இன்றியமையாததாகும். இதற்காக, உலக உணவுத் திட்டத்தின் (WFP) ஆதரவுடன் இணையம் மூலமான ஒரு தரவு தொடர்பாடல் வலையமைப்பைத் தாபிப்பதற்காக கணினிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இது 2023 பெப்ரவரியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இச் செயன்முறை குறைந்தளவான மனித வளத்தை உபயோகிப்பதுடன் வினைத்திறனானது. அதேவேளை தொலைபேசி இணைப்புகளுக்கான அதிக செலவையும் குறைக்கக் கூடியதாக அமைந்தது.
- கொழும்பு தலைமை அலுவலகத்தில் 2022 ஏப்ரலில் ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் கணினி உபகரணங்களுக்கு குறிப்பிடத்தக்க பாரிய சேதம் ஏற்பட்டது. எனவே, தலைமை அலுவலகத்திற்கும் வெளியக அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்ட மேற்கூறப்பட்ட கணினி உபகரணங்களை மின்னல் தாக்கத்திலிருந்து பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியமாக அமைந்தது. அதற்காகவும் தரவு தொடர்பாடல் செயன்முறையில் இடையூறு ஏற்படாமல் இருப்பதற்காகவும் 4.15 மில்லியன் ரூபா பெறுமதியான மின்னல் பாதுகாப்பு உபகரணங்கள் உலக உணவுத் திட்ட செயற்றிட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டுப் பொருத்தப்பட்டன.
- நீண்ட காலத் தேவையாக இருந்த கணிதவியல் மாதிரி எதிர்வுகூறல்களின் அபிவிருத்திக்கான கணினி சேர்வர் உபகரணங்கள் உலக உணவுத் திட்டத்தால் (WFP) பெற்றுக் கொள்ளப்பட்டமை ஒரு பாரிய அடைவாகும். இதன் பெறுமதி ஏறத்தாழ 37 மில்லியன் ரூபாவாகும்.
- ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் UNDP-CRIWMP செயற்றிட்டத்தின் கீழ், வானிலை நேயமான விவசாயத் தொழிற்றுறைக்காக வானிலை மற்றும் காலநிலை எதிர்வுகூறல்களை மேம்படுத்துவதற்காக 15.7 மில்லியன் ரூபா பெறுமதியான கணினிகள் ஸ்கேனர்கள் உள்ளடங்கலான உபகரணங்கள் வழங்கப்பட்டன. பழமையான அழிந்து வரும் தரவுத் தாள்கள் வழங்கப்பட்ட இந்த ஸ்கேனர்களின் உதவியுடன் பேணிப் பாதுகாக்கப்பட முடியும் என்பதுடன், பல பிரிவுகளின் தற்போதைய தரவுத் தாள்கள் கணினி மயப்படுத்தப்பட முடியும்.
- பருவகால மற்றும் நீண்ட கால எதிர்வுகூறல்களை வினைத்திறனாக வழங்கியதனூடாக பயிர்ச் சேதங்களைக் குறைக்கக் கூடியதாக அமைந்தது.
    - மாதாந்த வானிலை எதிர்வுகூறல்கள் மும் மொழியிலும் வழங்கப்பட்டன.

- பயிர்ச் சேதங்களைக் குறைப்பதற்காக மழைவீழ்ச்சி தொடர்பான எதிர்வுகூறல்களை துல்லியமாகவும் சரியான நேரத்திலும் வழங்கியதனூடாக அரச மற்றும் அரச சார்பற்ற பங்காளர்களுக்கு (விவசாயம் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான) தகவல் வழங்கப்படக் கூடியதாக இருந்தது.
- பொருத்தமான பங்காளர்களுடன் வானிலை நிலைமைகள் தொடர்பாக மாதாந்த நிகழ்நிலைக் கலந்துரையாடல்களை ஆரம்பித்ததன் மூலம் ஒரு மேலும் செயற்றிறனான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் வெற்றியின் மூலம், அது தற்போது விபரமான படங்களுடன் கூடிய வகையிலான கலந்துரையாடலாக இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை முன்வைக்கப்படுகின்றன.
- பருவப்பெயர்ச்சி கலந்துரையாடல் பங்காளர்களின் 'அடுத்த சில நாட்களுக்கான விபரமான வானிலை எதிர்வுகூறல்களுக்கான' வேண்டுகோளுக்கிணங்க, பிரதான பங்காளர்களுக்கு படங்களுடன் கூடிய வகையில் எதிர்வுகூறல்கள் நாளாந்தம் அனுப்பப்பட்டன. அது எதிர்வரும் நாட்களுக்கான வானிலை நிலைமைகள் தொடர்பாக ஒரு கருத்தைப் பெற உதவியதுடன் எடுக்க வேண்டிய அவசியமான எதிர்கால நடவடிக்கைகள் (அனர்த்தங்களுக்கான தயார்நிலையும் விவசாய செயற்பாடுகளுக்கு அவசியமான எதிர்கால நடவடிக்கைகளும்) தொடர்பாகவும் உதவியது. இந்த எதிர்வுகூறல்கள் இற்றைப்படுத்தப்பட்டு பொதுமக்களுக்குக் கிடைக்கக் கூடிய வகையில் தற்போது திணைக்களத்தின் இணையத்தளத்தில் தரவேற்றப்படுகின்றன.
- மேலும் செயற்றிறனான வானிலை மற்றும் காலநிலைத் தகவல்களை (பிரதேச ரீதியாகவும் நிகழ் நேரத்திலும் area specific, real time) பொதுமக்களுக்கும் ஆர்வமுள்ள ஏனைய பிரிவினருக்கும் வழங்குவதற்காக WEB GIS இணையத்தளத்தையும் அலைபேசிச் செயலியையும் (APP) தாபிக்கும் வேலை பூரணப்படுத்தப்பட்டுள்ளது.
- கணித மாதிரிகளை மேம்படுத்துவதற்காகவும் வானிலைத் தரவுகளின் பாவனை மற்றும் ஆய்வுகளுக்குத் தேவையான கணினி அறிவை அதிகரிப்பதற்காகவும் LINUX /R/ PHOTOSHOP / ILLUSTRATOR தொடர்பான பயிற்சி வழங்கப்பட்டது.
- தாக்க அடிப்படையிலான எதிர்வுகூறல்களுக்கு (impact based forecasting) அவசியமான GIS பயிற்சி ஒன்று வளிமண்டலவியலாளர்கள், அவதானிப்பாளர்கள், கணினி மற்றும் ஆய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு CRIWMP ஆல் ஒழுங்கு செய்யப்பட்டது.

2.2 ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டுப் பிரிவும் காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையமும்
2022 இல் பின்வரும் பிரிவுகளில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

- இந்து சமுத்திர வெப்பமாதல் இலங்கையில் 2000 – 2020 காலப்பகுதியில் தென்மேல் பருவப்பெயர்ச்சி மழைவீழ்ச்சியை எவ்வாறு பாதித்தது என்பது தொடர்பான ஆய்வு.

- 19 பிரதான வளிமண்டலவியல் நிலையங்களிருந்தான 1950 – 2020 காலப்பகுதிக்கான காலநிலைத் தரவுகளை CLIMpact 2 ஆய்வு செய்தது. அது தொடர்பான ஆய்வு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருகின்றது.
- IWMI ஆல் வழங்கப்பட்ட பிந்திய IPCC காலநிலை மாற்ற எதிர்வுகூறல்களுக்கு (SSPs) இணங்க இலங்கைக்குப் பொருத்தமான எதிர்வுகூறல்களைத் தயாரித்தல்.
- இலங்கையில் வரட்சி நிலைமைகள் தொடர்பான கண்காணிப்புகளை மேம்படுத்துவதற் காகவும் வரட்சி எதிர்வுகூறல்களை முன்னெடுப்பதற்காகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- பூகோள காலநிலை மாதிரிகளால் வழங்கப்படும் காலாண்டுக்கு ஒரு முறை அவதானிக்கப்பட்ட மழைவீழ்ச்சியுடன் ஒப்பிடுவதன் மூலம் இலங்கைக்கான இதன் செல்லுபடித் தன்மையைப் பரிசோதித்தல்
- காலநிலை மாற்றத்திற்கான பாரிஸ் உடன்படிக்கையின் 4ம் வாசகம், 12ம் பிரிவுக்கிணங்க, காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் (IPCC) உள்ளூர் குவியப் புள்ளி என்ற ரீதியில், பங்காளர்களால் தொடர்பாடப்பட்டவாறு NDC க்கான தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கு அவசியமான தகவல்களை வழங்குதல்

ஆய்வு வெளியீடுகள்

- 2020 செப்டம்பர் 1ஆம் திகதி அறிவிக்கப்பட்ட குறுகிய காலத்தில் அதிக மழைவீழ்ச்சி நிலைமைக்கு இட்டுச் சென்ற வானிலை நிகழ்வு தொடர்பான ஆய்வுக் கட்டுரை 'Center for Science and Technology of the Non-Aligned and Other Developing Countries (NAM S&T Center)' இதழுக்காக வழங்கப்பட்டது.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு மற்றும் காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட வழமையான செயற்பாடுகள்

வரட்சி நிலைமைகள் தொடர்பான கண்காணிப்பு

- வரட்சி நிலைமை அறிக்கை – வரையளவுப்படுத்தப்பட்ட மழைவீழ்ச்சிச் சுட்டியை உபயோகித்து வரட்சி நிலைமை கண்காணிப்பும் வரைபடமாக்கலும். மாதாந்த மழைவீழ்ச்சித் தரவுகளை உபயோகித்து, முறையே 1, 3, 6, 9 மற்றும் 12 மாதங்களுக்கும் வரட்சி நிலைமை அவதானிக்கப்பட்டு வரட்சி நிலைமை தொடர்பான மாதாந்த அறிக்கை பொருத்தமான நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- இலங்கையில் வரட்சி நிலைமைகள் தொடர்பான கண்காணிப்புகளை மேம்படுத்துவதற் காகவும் வரட்சி எதிர்வுகூறல்களை முன்னெடுப்பதற்காகவும் கொழும்புப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது.

- வரட்சி நிலைமைகள் தொடர்பான கண்காணிப்புகளுக்கும் எதிர்வுகூறல்களை மேற்கொள்வதற்குமான நோக்கில் உலக உணவுத் திட்டத்தின் (WFP) உதவியுடன் PRISM என்ற மென்பொருள் இலங்கைக்காக மாற்றம் செய்யப்பட்டது.

நீண்ட கால எதிர்வுகூறலுடன் தொடர்பான செயற்பாடுகள்

- பூகோள காலநிலை வரம்புருவையும் CPT, FOCUS, ITACS ஆகிய மென்பொருட்களையும் உபயோகித்து மாதாந்த மற்றும் காலாண்டுக்கான மழைவீழ்ச்சி மற்றும் வெப்பநிலை எதிர்வுகூறல்கள் உருவாக்கப்பட்டு பொருத்தமான நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- வளிமண்டலவியல் நிலையங்களில் அவதானிக்கப்பட்ட வளிமண்டலவியல் தரவுகளை உபயோகித்து மாதாந்த மழைவீழ்ச்சியைச் சரிபார்த்தல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் (IPCC) உள்ளூர் குவியப் புள்ளி என்ற ரீதியில், காலநிலை மாற்றங்களுக்கான கற்றல் நிலையத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவால் (IPCC) வெளியிடப்படவுள்ள பின்வரும் விசேட அறிக்கைகளில் உள்ளூர் விசாரணைகளில் ஈடுபடல்.
- காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவால் (IPCC) அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சமூக பொருளாதாரப் பாதைவழிகளின் (SSPs) கீழ் இலங்கையில் உள்ளூர் மட்டத்தில் பூகோள காலநிலை மாதிரிகளிலிருந்தான காலநிலை எதிர்வுகூறல் தரவுகளின் விபரமான ஆய்வு

2.3 மழைவீழ்ச்சி, தரவு, காலநிலையியல், உபகரணத் தரவு செயன்முறையும் பேணிப் பாதுகாத்தலும் (கணினிமயப்படுத்தப்பட்ட) பிரிவுகளதும் வெளியக அலுவலகங்களினதும் முன்னேற்றம்

2.3.1 தரவுப் பிரிவின் முன்னேற்றம்

- தொடர்ச்சியாகத் தரவுகளை (வெப்பமானி வரைபுகள், ஈரப்பதமானி வரைபுகள், மழைவீழ்ச்சி வரைபுகள், காற்று வரைபுகள் மற்றும் சூரிய வெய்யில் வரைபுகள்) அளவிட்டு வரும் உபகரணங்களின் தரவுத் தரக் கட்டுப்பாடும் காப்பகப்படுத்தலும்
- 23 வளிமண்டலவியல் நிலையங்களில் மாதாந்த காற்றின் வேகம் மற்றும் திசைக் கணிப்பீடும் 10 வளிமண்டலவியல் நிலையங்களில் சூரிய வெய்யில் மணித்தியாலங்களைச் சோதித்தலும் காப்பகப்படுத்தலும்
- 2022 இல் வெளியகப் பிரிவினருக்கு தரவுகளை விற்பனை செய்ததன் மூலம் **ரூ. 109,920.00** சம்பாதிக்கப்பட்டது.

2.3.2 தரவு செயன்முறை மற்றும் காப்புப் பிரிவு

- 23 வளிமண்டலவியல் நிலையங்களினால் (நாளாந்தம் / மாதாந்தம்) வழங்கப்பட்ட தரவுகள், மழைவீழ்ச்சி, வெப்பநிலை (அதியுச்ச / குறைந்த), ஈரப்பதன் (பகல் / இரவு), காற்றின் வேகம், மேகங்களின் எண்ணிக்கை மற்றும் இடிமுழக்க அறிக்கைகள் கணினிமயப்படுத்தப்பட்டன.
- 430 மழைவீழ்ச்சி நிலையங்களின் தரவுகள் (நாளாந்தம் / மாதாந்தம்) எண்ணிக்கையிடப்பட்டன.
- 23 வெளியக வளிமண்டலவியல் நிலையங்களிலிருந்து அவதானிப்புத் தரவுகளை கொழும்பு வளிமண்டலவியல் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கும் உள்வரும் தரவுகளை GTS தொகுதியில் synop தரவுகளாக மாற்றுவதற்குமான கணினி மென்பொருள் தயாரிக்கப்பட்டது.
- வெளியகப் பிரிவினருக்கு தரவுகளை வெளியிடுதல்
    - வழங்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை – 851
    - பெறப்பட்ட வருமானம் - ரூ. 27,775,240

2.3.3 மழைவீழ்ச்சித் தரவுகளின் முன்னேற்றம்

- மழைவீழ்ச்சித் தரவுகளை அவதானிப்பதற்காக நாடு முழுவதும் தாபிக்கப்பட்டுள்ள மழை மானி நிலையங்களின் வலையமைப்பில் 485 மழை மானி நிலையங்கள் உள்ளடங்குவதுடன், இவற்றில் 423 இற்கும் மேற்பட்ட நிலையங்களிலிருந்து கிரமமாக வருடம் முழுவதும் தரவுகள் பெறப்பட்டன. இந் நிலைமையானது அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் தன்னார்வ அவதானிப்பாளர்களுடனும் இணைந்து தொடர்ச்சியாகப் பேணப்படுகின்றது.
- 01 மழை மானி நிலையம் மீள செயற்படுத்தப்பட உள்ளது.

2.3.4 காலநிலைப் பிரிவின் முன்னேற்றம்

- இந்தப் பிரிவின் பிரதான கடமைகளாவன: சூரியன் உதிக்கும் மற்றும் சூரியன் மறையும் நேரத்தை அறிவித்தல், சந்திரன் உதிக்கும் மற்றும் சந்திரன் மறையும் நேரத்தை அறிவித்தல், விளக்கு எரிக்க வேண்டிய நேரம், இலங்கையின் ஒவ்வொரு இடத்திலும் சூரியன் உதிக்கும் போது நட்சத்திரங்களின் கட்புலத் தன்மை, தலைப்பிறை காணுதல், சந்திர கிரகணம், ரம்ழான் மாதத்தின் ஆரம்பம் மற்றும் முடிவு போன்றவற்றை தீர்மானித்தலும் அறிவித்தலும் அதேபோன்று ஏனைய பொருத்தமான நிறுவனங்களுக்கு தகவல்களை வழங்குதலும்.
- இந்தப் பிரிவு போயா மற்றும் பொது விடுமுறை செயற்குழுவின் ஒரு உறுப்பினராக செயற்படுகின்றது.
- வெளியகப் பிரிவினருக்கு தகவல்களை வழங்கியதன் மூலம் 2022ம் ஆண்டில் **ரூ. 135,865.00** சம்பாதிக்கப்பட்டது.

2.3.5 உபகரணப் பிரிவின் முன்னேற்றம்

- விலைமனு ஆவணங்கள், தொழில்நுட்ப அறிக்கைகள், B.O.Q. மற்றும் தொழில்நுட்ப விபரக் குறிப்புகளைத் தயாரிப்பதற்கான ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

- இலத்திரனியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான உபகரணங்கள் மற்றும் திணைக்களத்திலுள்ள தொகுதிகளின் 743 மின்னியல் மற்றும் கணினி திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.
- தொடர்ச்சியான சேவையை உறுதிப்படுத்துவதற்காக திணைக்களத்தின் கணினி வலையமைப்பு, GTS வலையமைப்பு, IP/VPN, Himawaricast, CISN, மின்னல் கண்காணிப்புத் தொகுதி மற்றும் மின்னியல் தொகுதிகளைப் பராமரித்தல்.
- திணைக்களத்தின் வெளியக வளாகத்திற்கான மின் விநியோகத் தொகுதியைப் பொருத்துதல்.
- கடந்த ஆண்டில் 13 குளிர்பதன இயந்திரங்களின் பராமரிப்பு சேவை வழங்குநர்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டது.
- "சூரியத் தரவுகளைச் சேகரித்தலும் தன்னியக்க வானிலை நிலையங்கள் AWS பழுதுபார்த்தலும்" செயற்றிட்டத்தின் கீழ் இலங்கை சூரிய சக்தி அதிகாரசபையுடன் இணைந்து 12 தன்னியக்க வானிலை நிலையங்கள் பழுதுபார்க்கப்பட்டு மேம்படுத்தப்பட்டன, எனவே GPRS ஊடாக தரவுகள் கிரமமாகப் பெற்றுக் கொள்ளப்படலாம்.
- 10 வெளியக வளிமண்டலவியல் அலுவலகங்களில் ADSL மற்றும் மின்னல் பாதுகாப்பு உபகரணங்கள் பொருத்துதல் மேற்கொள்ளப்பட்டது.

2.3.6 வெளி அலுவலகங்களின் முன்னேற்றம்

- வெளி அலுவலகங்களில் 08 அலுவலகங்கள் இரண்டு நபர்களுடனும் 09 அலுவலகங்கள் நான்கு நபர்களுடனும் இயங்குகின்றன. மூன்று மேல் வளிமண்டல காற்று அவதானிப்பு அலுவலகங்கள் ஐந்து நபர்களுடனான அலுவலகங்களாக இயங்குகின்றன. அத்துடன், 3 வானியல் வளிமண்டலவியல் அலுவலகங்களும் உள்ளன. 2022 ஆம் ஆண்டில், வளிமண்டலவியல் திணைக்களத்தின் நிலப்பரப்பு வளிமண்டலவியல் நிலையங்களின் வலையமைப்பு மூலம் 61423 நிலப்பரப்பு வளிமண்டலவியல் அவதானிப்புகளை மேற்கொண்டதுடன் இவற்றில் மழைவீழ்ச்சி, அழுத்தம், வெப்பநிலை, ஈரப்பதன், காற்று, கட்புலத் தன்மை மற்றும் மேகங்களின் தன்மை மற்றும் அளவுகள் என்பனவும் உள்ளடங்கும்.
- மஹாஇலுப்பல்லகம அலுவலகத்தின் கூரை நிர்மாணிப்பிற்கான விலை மதிப்பீட்டுக் கோரிக்கை இபலோகம பிராந்திய அலுவலகத்தால் அனுப்பப்பட்டது. ஆனால் சந்தையில் ஏற்பட்ட விலைத் தளம்பல்கள் காரணமாக முறையான விலை விபரங்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை எனக் கூறப்பட்டுள்ளது.
- மன்னார் மற்றும் இரத்தினபுரி அலுவலகங்களின் புனரமைப்பிற்கான விலை மதிப்பீட்டுக் கோரிக்கைகள் அந்த அந்த அலுவலகங்களால் கோரப்பட்டுள்ளன.
- தூண்களின் மீது நிர்மாணிக்கப்பட்டுள்ள பொத்துவில் அலுவலகத்தின் தூண்கள் அரிக்கப்பட்டுள்ள காரணாத்தால் சிவில் பொறியியலாளரின் பரிந்துரைக்கு அமைய

பொத்துவில் அலுவலகம் பயன்பாட்டிற்கு உகந்ததா இல்லையா என்பது குறித்த அறிக்கை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தால் கோரப்பட்டுள்ளது.

- புத்தளம் அலுவலம் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளங்கள் காரணமாகப் பல தடவைகள் பாதிக்கப்பட்டு சுவர்களும் தரையும் வெடிப்புக்கு உள்ளாகியுள்ளன. இடர் ஆபத்து தொடர்பான அறிக்கை ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கிணங்க, பரிந்துரைக்கப்படும் திருத்த வேலைகளின் அடிப்படையில் இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அந்த அலுவலகம் பயன்படுத்தப்பட முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது.
- காலி அலுவலகத்தை திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் ஊடாக புதுப்பிக்கப்படுவதற்கு பிரதேச செயலகத்தால் விலை மதிப்பீட்டுக் கோரிக்கை கோரப்பட்டுள்ளது. விலைகள் ஆண்டின் இறுதிக் காலாண்டில் வழங்கப்பட்டுள்ளன. விலைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலையை நிறைவு செய்வதற்கான அவசியமான நடவடிக்கைகள் 2023 இன் முதலாம் காலாண்டில் எடுக்கப்பட்டன.
- காட்டு யானைகளின் தொந்தரவுகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக பொலன்னறுவை அலுவலகம் வன சீவராசிகள் திணைக்களத்திடம் இருந்து உதவி கோரியுள்ளது.
- கட்டுகஸ்தோட்டை மற்றும் குருநாகல் அலுவலகங்களின் குளியலறைகளும் மலசல கூடங்களும் திணைக்களத்தின் சிவில் பொறியியலாளர்களாலும் ஊழியர்களாலும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- குருநாகல் அலுவலகத்தின் உட்கூரையின் ஒரு பகுதி சடுதியாக உடைந்து வீழ்ந்ததன் காரணமாக திணைக்களத்தின் சிவில் பொறியியலாளர் பிரிவால் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

2.3.7 விவசாய வளிமண்டலவியல் பிரிவின் முன்னேற்றம்

- ❖ 2022 ஆம் ஆண்டில், இந்தப் பிரிவால் வெளியகப் பிரிவினருக்கு தரவுகள் வழங்கியதன் மூலம் ரூ. 593,930.00 சம்பாதிக்கப்பட்டது.
- ❖ ஒரு வாராந்த விவசாய வானிலை செய்திமடல் வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதற்காக புதிய உத்தியோகத்தர்கள் பலர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டுள்ளனர்.
- ❖ விவசாய, நீர்ப்பாசன, மகாவலி மற்றும் விவசாய ஆராய்ச்சித் திணைக்களம் மற்றும் பொருத்தமான நிறுவனங்களுடன் இணைந்து மாதாந்த வானிலை ஆலோசனை அறிக்கையை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.
- ❖ 2022 ஆம் ஆண்டில், நாட்டில் காணப்பட்ட எரிபொருள் பிரச்சனை, நிதிப் பிரச்சனை மற்றும் விசேட விடுமுறைகள் காரணமாக தரவு சேகரிக்கும் நிலையத்தின் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.
- ❖ 2022 ஆம் ஆண்டில், கீழ்க்குறிப்பிடப்படும் வெளியக நிறுவனங்களால் செயற்படுத்தப்படுகின்ற விவசாய வளிமண்டலவியல் நிலையங்களில் காணப்பட்ட

பழுதடைந்த உபகரணங்களுக்குப் பதிலாக அளவு பொறிக்கப்பட்ட உபகரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இல.	நிலையம்	உபகரணம்	எண்ணிக்கை
1.	ரந்தெனிகல (மகாவலி)	உச்ச வெப்பமானி	1
2.	உல்ஹிட்டிய (மகாவலி)	உச்ச வெப்பமானி	1
3.	கொத்மலை (மகாவலி)	உச்ச வெப்பமானி	1
4.	அரலகங்வில்ல (விவசாயத் திணைக்களம்)	மண் வெப்பமானி	1
		உச்ச வெப்பமானி	1
		பொது வெப்பமானி	1
5.	தேசிய வள முகாமைத்துவ நிலையம்	இழிவு வெப்பமானி	1
6.	விவசாயத் திணைக்களம்	உச்ச வெப்பமானி	1
7.	வீரவில (விவசாயத் திணைக்களம்)	உச்ச வெப்பமானி	1

❖ விவசாய வானிலை நிலையங்களால் வழங்கப்படும் (நாளாந்த / மாதாந்த) தரவுகள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன.

2.4 சவால்கள்

- இந்த 2022 ஆம் ஆண்டிற்கான இலக்குகளை அடைவதில் கொவிட் 19 உம் அதே போன்று எரிபொருள் தட்டுப்பாடும் குறிப்பிடத்தக்க தடைகளாக அமைந்தன.
- போதுமான தகைமை வாய்ந்த / பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள், அதே போன்று வெளியக அலுவலகங்களுக்கான வளிமண்டலவியல் அவதானிப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் இல்லாமை ஒரு பாரிய சவாலாகும்.
- வளிமண்டலவியல் என்பது வானிலை செயன்முறைகள் மற்றும் எதிர்வுகூறல்களின் நாளாந்த இற்றைப்படுத்தல்களை மையப்படுத்திய வளிமண்டலத்தின் விஞ்ஞானபூர்வ கற்கை ஆகும். இந்த நிகழ்வுகள் புவியின் பின்வரும் வளிமண்டலத்து மாறிகளுடன் இணைந்துள்ளன: வெப்பநிலை, அழுத்தம், நீராவி மற்றும் ஒவ்வொரு மாறிகளினதும் ஒன்றுடன் ஒன்று இடைத்தாக்கமும் காலத்துடன் அவற்றின் மாற்றங்களுமாகும்.
- அவதானிக்கப்பட்ட பெரும்பாலான வளிமண்டலவியல் நிகழ்வுகள் வெப்பவலயத்தில் காணக் கூடியதுடன், பல நிகழ்வுகள் சடுதியாக மாறக் கூடியவையாகும். இந்த வளிமண்டலவியல் தொகுதிகளின் மீதான சரியான எதிர்வுகூறலானது இந்த வலயத்திலுள்ள நாடுகளுக்கு ஒரு பிரதான சவாலான விடயமாகும். இலங்கையும் இந்த வெப்பவலயத்திலேயே உள்ளதுடன் மத்திய அகலாங்குகளில் உள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள் சிக்கலானதும் சவாலானதுமாகும். இதற்காக உலகத்தில் பயன்படுத்தப்படும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதோடு பொருத்தமான உட்கட்டமைப்பு வசதிகளையும் வழங்குவதுடன் பொருத்தமான மனிதவளத்தைப் பயிற்றுவிப்பதும் மேம்படுத்துவதும் மேற்கொள்ளப்பட வேண்டும்.
- ஒப்பீட்டு அடிப்படையில் வளிமண்டலவியல் என்பது அபிவிருத்தியடைந்த நாடுகளில் எண்ணிம வளிமண்டலவியல் எதிர்வுகூறல்கள் போன்ற கணினி மாதிரிகளில் அதிகளவான கவனம் மற்றும் முதலீடுகள் காரணமாக ஒரு பிரதான திருப்புமுனையாகக் கருதப்படக் கூடியதாகும். இது தொடர்பாக உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் காணப்படுகின்ற தொழில்நுட்பங்களை அடைவதற்கு

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. தகைமை வாய்ந்த மனித வளம் குறைவாக இருப்பதும் திணைக்களத்தின் முன்னுள்ள இன்னொரு சவாலாகும்.

- வளிமண்டல அவதானிப்பு வலையமைப்பைப் பலப்படுத்துவது துல்லியமான வானிலை எதிர்வுகூறல்களை வழங்குவதற்கு அத்தியாவசியமான ஒரு காரணியாகும். தற்போதைய காலநிலை மாற்றத்தின் காரணமாக காலநிலை மற்றும் வானிலை எதிர்வுகூறல்கள் கடினமானதாக மாறியுள்ள ஒரு பின்னணியில் ஆய்வுகள் / ஆராய்ச்சிகளை மேற்கொள்வது கட்டாயமானதாகும். இதற்கும் தகைமை வாய்ந்த / பயிற்சி பெற்ற வளிமண்டலவியலாளர்கள் இல்லாமை ஒரு பாரிய சவாலாகும்.

2.5 எதிர்கால இலக்குகள்

- **வளிமண்டலவியல் திணைக்களத்தை நவீனமயப்படுத்தல்**

  வளிமண்டலவியல் திணைக்களமானது நீர்ப்பாசனத் திணைக்களத்தின் "காலநிலை மீளெழுச்சிக்கான பல – கட்ட முறையான அணுகுமுறை" (CresMPA) செயற்றிட்டத்தின் கீழ் நவீனமயப்படுத்தப்படத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது வளிமண்டலவியல் அவதானிப்பு வலையமைப்பை மேம்படுத்தல், பொருத்தமான மனித வளத்தை மேம்படுத்தல், மற்றும் எதிர்வுகூறலை விருத்தி செய்தல் போன்றவற்றை மேற்கொள்ளும். இதன் பிரதான நோக்கங்களாக, தேவையான தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் போன்றவையாகும்.

- **புத்தளத்தில் ரேடார் தொகுதிகளைப் பொருத்துதல்**

  தவிர்க்க முடியாத சூழ்நிலைகளின் காரணமாக, இரண்டு டொப்ளர் ரேடார் தொகுதிகளைப் பொருத்துவதற்கான செயற்றிட்டமானது ஒரு தொகுதியாகக் குறைக்கப்பட்டது. முன்னைய ஒதுக்கீடு ஒரு ரேடார் தொகுதி செயற்றிட்டத்திற்குப் போதுமானதாக இல்லை, எனவே JICA ஆலோசகர்களுடனும் ERD உடனும் மேலதிக நிதியைப் பெறுவதற்கான கலந்துரையாடல் நடைபெற்று வருகின்றது. செயற்றிட்டம் தாமதம் அடைந்துள்ளது, எனினும் அதை இயன்றளவு விரைவில் மீள செயற்படுத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த பிரிவினருடன் தொடர்ச்சியாக நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றோம்.

- காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறிகள் காலநிலை நுண் உணர்திறன் கொண்ட பிரிவுகளான விவசாயம், அனர்த்த முகாமைத்துவம், வலு மற்றும் சுகாதாரத் துறையிலுள்ள நடவடிக்கைகளில் அதிக அழுத்தத்தைக் கொண்டிருக்கும் காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறுபாடுகளிலிருந்தான தாக்கங்களைத் தணிப்பதை மையப்படுத்திய அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. காலநிலை சேவைகளை நவீனமயப்படுத்துவதன் மூலம் காலநிலை நுண் உணர்திறன் கொண்ட பிரிவுகளில் எடுக்கப்பட வேண்டிய தீர்மானங்களை இலகுவாக்குவதற்கு காலநிலை மாற்றங்கள் மற்றும் மாறுபாடுகளின் காரணமாக ஏற்படும் சவால்களை வெற்றி கொள்ள வேண்டியதும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதும் அத்தியாவசியமானதாகும்.
- காலநிலை மாற்றத்தால் ஏற்படுத்தப்பட்ட மோசமான விளைவுகளுக்கு இலங்கை முகம் கொடுப்பதற்கு நாட்டில் காலநிலை மாற்றத்தை அனுசரிப்பதற்கான நடவடிக்கைகளை

மேற்கொள்வது இன்றியமையாததாகும். காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவின் உள்ளூர் நிலையமான வளிமண்டலவியல் திணைக்களம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கங்கள் மற்றும் காலநிலை மாற்றத்தை அனுசரித்தல், காலநிலை மாற்றங்கள் தொடர்பான பூகோள எதிர்வுகூறல் மாதிரிகளிலிருந்தான தரவுகளை பிராந்திய விபரங்களுக்கு ஏற்ற வகையில் அளவு குறைத்தல், காலநிலை மாற்றங்களினால் ஏற்படுத்தப்படுகின்ற தாக்கங்களை ஆய்வு செய்தல் மற்றும் ஆய்வுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல், காலநிலை மாற்றங்கள் தொடர்பான பிந்திய கண்டறிதல்களில் மக்களை வலுவூட்டுதல் போன்றவற்றுக்குப் பொறுப்பானதாகும்.

பணிப்பாளர் நாயகம்
வளிமண்டலவியல் திணைக்களம்

பிரிவு 03

2022 டிசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயற்பாடுகள்

3.1 நிதிச் செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ- எப்

2022 டிசம்பர் 31ல் முடிவடைந்த ஆண்டிற்கான
நிதிச் செயலாற்றுகைக் கூற்று

பாதீட்டு 2022		உண்மை நிலை 2022	2021
ரூபா		ரூபா	ரூபா
	வருமானப் பெறுகைகள்		
	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	-	-
	மொத்த வருமானப் பெறுகைகள் (அ)	-	-
	வருமானம் பெறுகைகள்		
	திறைசேரி பணிமுற்பணங்கள்	349,928,000.00	320,884,000.00
	வைப்புகள்	5,942,376.28	1,066,950.00
	முற்பணக் கணக்குகள்	10,569,282.41	8,956,153.10
	ஏனைய பெறுகைகள்	-	-
	மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)	**366,439,658.69**	**330,907,103.10**
	மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)	**366,439,658.69**	**330,907,103.10**
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)	**74,211.60**	**3,707.97**
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)	**366,365,447.09**	**330,903,395.13**
	கழி : செலவினம்		
	மீண்டுவரும் செலவினம்		
279,240,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	269,513,492.36	255,164,416.27
62,150,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	57,110,018.36	55,082,669.67
25,350,000	மானியங்கள், கொடைகள மற்றும் மாற்றல்கள்	24,966,680.33	22,456,658.64
366,740,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**	**351,590,191.05**	**332,703,744.58**
	மூலதனம் செலவினம்		
5,000,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	3,037,190.73	390,440.00
41,100,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	13,240,551.85	8,589,797.72
1,430,000	மனித வள அபிவிருத்தி	1,356,049.50	514,599.04
377,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	-	-
425,030,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**	**17,633,792.08**	**9,494,836.76**
	வைப்புக் கொடுப்பனவுகள்	4,983,495.68	1,510,006.99
	முற்பணக் கொடுப்பனவுகள்	9,710,338.00	8,092,248.80
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்	-	-
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)	**14,693,833.68**	**9,602,255.79**
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)	**383,917,816.81**	**351,800,837.13**
	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)	**(17,552,369.72)**	**(20,897,442.00)**
	பணிமுற்பண இணக்க அறிக்கையின்படி மீதி	**(17,552,369.72)**	**(20,897,442.00)**
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி	-	-
791,770,000		**(17,552,369.72)**	**(20,897,442.00)**

67

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	உண்மை நிலை	
	2022	2021
	ரூபா	ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது		
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	3,890,031,063.22	3,880,946,331.37
நிதி சொத்துக்கள்		
முற்பணக் கணக்குகள்	21,995,268.80	22,854,213.21
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	-	-
மொத்த சொத்துக்கள்	**3,912,026,332.02**	**3,903,800,544.58**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு		
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்	20,198,338.36	22,016,163.37
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்	3,890,031,063.22	3,880,946,331.37
நடைமுறைப் பொறுப்புக்கள்		
வைப்பக் கணக்குகள்	1,796,930.44	838,049.84
பணிமுற்பண மீதி	-	-
மொத்தப் பொறுப்புக்கள்	**3,912,026,332.02**	**3,903,800,544.58**

பக்க இலக்கம் 68 முதல் 88 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின;/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 89 முதல் 94 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: ஜெனரல் கமால் குணரட்ன (ஓய்வுபெற்ற)
ஆர்எஸ்பீ யுஎஸ்பீ எனடிசீ பீஎஸ்சீ
பதவி : செயலாளர்
பாதுகாப்பு அமைச்சு
திகதி : 2023.02 17

General Kamal Gunaratne (Retd)
WWV RWP RSP USP ndc psc MPhill
Secretary
Ministry of Defence
Defence Headquarters Complex
Sri jayawardenapura
Kotte

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: A.K.கருணாநாயக்க
பதவி : பணிப்பாளர் நாயகம்
திகதி : 2023.02. 14

A.K. Karunanayake
Director General
Department of Meteorology
383, Bauddhaloka Mawatha,
Colombo 07.

பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர்/
பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர் : எஸ். அகிலன்
திகதி : 2023.02.13

S. AHELAN
Chief Accountant
Department of Meteorology
383, Bauddhaloka Mawatha,
Colombo - 07.

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

2022 டிசம்பர் 31ல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	உண்மை	
	2022	2021
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	18,542,483.45	21,628,039.03
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	349,928,000.00	320,884,000.00
முற்பணங்களிலிருநது அறவிடப்பட்டவை	11,114,828.41	9,492,823.40
கிடைக்கப்பெற்ற வைப்புகள்	5,942,376.28	1,066,950.00
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**385,527,688.14**	**353,071,812.43**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	329,341,640.87	310,911,710.98
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	24,966,680.33	22,456,658.64
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	3,210,769.81	1,507,681.33
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	74,211.60	3,707.97
முற்பணக் கொடுப்பனவுகள்	9,710,338.00	8,092,248.80
வைப்புகளின் கொடுப்பனவு	4,983,495.68	1,510,006.99
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**372,287,136.29**	**344,482,014.71**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**13,240,551.85**	**8,589,797.72**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
கொள்வனவு அல்லது பௌதீகச் சொத்தக்களின் நிர்மாணிப்பு மற்றும் ஏனைய முதலீடுகளின் கொள்வனவு	13,240,551.85	8,589,797.72
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**13,240,551.85**	**8,589,797.72**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(13,240,551.85)**	**(8,589,797.72)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ)+(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

69

3.4 நிதிக் கூற்றுக்கான குறிப்புகள்

3.5 வருமானச் சேகரிப்பு செயற்பாடுகள்

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு (ரூ.)		சேகரிக்கப்பட்ட வருமானம்	
		மொத்த மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமானம் மதிப்பீட்டின் சதவீதமாக %.
பொருத்தம் இல்லை	-	-	-	-	-

3.6 ஒதுக்கப்பட்ட கொடுப்பனவுகளைப் பயன்படுத்திய செயற்பாடுகள்

கொடுப்பனவு வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடு (ரூ.)		உண்மையான செலவு (ரூ.)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், இறுதி ஒதுக்கீடுகளில் சதவீதமாக %.
	நிதி ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
மீள்வரும்	363,540,000.00	366,740,000.00	351,590,191.05	96%
மூலதனம்	425,030,000.00	425,030,000.00	17,633,792.08	4%

3.7 FR 208 (நி.ஒ 208) இற்கிணங்க, வேறு ஒரு அமைச்சு / திணைக்களத்தின் பிரதிநிதியாக இந்தத் திணைக்களம் / பிரதேச செயலகம் / மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஒதுக்கீடுகள்

தொடர் இல.	ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொண்ட அமைச்சு / திணைக்களம்	ஒதுக்கீட்டின் நோக்கம் (ரூ.)	ஒதுக்கீடுகள் (ரூ.)		உண்மையான செலவு (ரூ.)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள், ஒதுக்கீடுகளில் சதவீதமாக %.
			ஆரம்ப ஒதுக்கீடுகள்	இறுதி ஒதுக்கீடுகள்		
பொருத்தம் இல்லை	-	-	-	-	-	-

3.8 நிதி அல்லாத சொத்துகளை அறிக்கையிடும் செயற்பாடுகள்

சொத்து குறியீடு	குறியீட்டின் விபரம்	மதிப்பாய்வு சபைக்கு இணங்க, 31.12.2019 இல் மீதி (ரூ.)	நிதி நிலைமை அறிக்கைக்கு இணங்க, 31.12.2019 இல் மீதி (ரூ.)	எதிர்கால கணக்கீட்டுக் காக (ரூ.)	அறிக்கை முன்னேற்றம் சதவீதமாக %.
9151	கட்டடங்களும் கட்டமைப்புகளும்	278,325,000.00	278,325,000.00	-	-
9152	இயந்திரங்கள்	330,970,360.52	330,970,360.52	-	-
9153	நிலம்	3,280,735,702.70	3,280,735,702.70	-	-
9154	புலப்படாச் சொத்துகள்	-	-	-	-
9155	உயிரியல் சொத்துகள்	-	-	-	-
9160	செயற்படு நிலை	-	-	-	-
9180	குத்தகைக்கு எடுக்கப்பட்ட சொத்துகள்	-	-	-	-

3.9 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 31 டிசம்பர் 2022 இல் உள்ளவாறான நிதிக் கூற்றுகள் மீதான கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இந்த அறிக்கையின் இறுதியில் இணைப்பாக (இணைப்பு 01) வழங்கப்பட்டுள்ளது.

பிரிவு 04

செயற்பாட்டு குறிகாட்டிகள்

4.1 – நிறுவனத்தின் செயற்பாட்டு குறிகாட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க)

விசேட குறிகாட்டிகள்	உண்மையான வெளியீடுகள் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடுகளின் சதவீதமாக %		
	100%- 90%	**75%-89%**	**50%-74%**
1. அனர்த்த இடர்களைக் குறைப்பதற்காக சரியான நேரத்தில் முன்னெச்சரிக்கைகளை வழங்குதல்	95%		
2. அவதானிப்பு வலையமைப்புகளை மேம்படுத்தல்	95%		
3. பொதுமக்களுக்கான வளிமண்டலவியல்/ காலநிலையியல் சேவைகளை மேம்படுத்தல்	95%		
4. எதிர்வுகூறல்களின் துல்லியத்தன்மையை மேம்படுத்தல்	95%		

பிரிவு 05

செயற்பாட்டு குறிகாட்டிகள்
(செயற்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க)

5.1 பொருத்தமான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையாளம் காணல்

இலக்கு	இலக்கு	அடைவுக்கான குறிகாட்டி	இலக்குகளை அடைவதில் முன்னேற்றம்		
			0% - 49%	50%- 74%	75%- 100%
13. காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்க்கக்கூடிய அவசர நடவடிக்கைகளை எடுத்தல்	13.1 காலநிலை மாற்றம், காலநிலை மற்றும் வானிலை தொடர்பான அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காக மீளெழுச்சி மற்றும் இயலளவை வலுவூட்டல் 13.1.a அதிக நம்பகத்தன்மை கொண்ட வானிலை மற்றும் காலநிலை தொடர்பான தகவல்கள், எதிர்வுகூறல்கள் மற்றும் மோசமான வானிலை எச்சரிக்கைகளை வழங்கல் 13.1.b தாக்கத்தின் அடிப்படையிலான எதிர்வுகூறல் செயற்பாடுகளை அதிகரித்தல் 13.1.c எதிர்வுகூறல் அடிப்படையிலான நடவடிக்கை	13.1.1 அனர்த்தங்களால் ஏற்படும் இறப்பு வீதம் 13.1.2 உள்ளக இடம்பெயர்ந்தோர், காணாமல் போனோர், மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோர்	* 20%		
	13.2 தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடலில் காலநிலை மாற்ற முறைமைகளை உள்வாங்கல் 13.2.a தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடலுக்காக எதிர்கால	13.2.1 எதிர்கால காலநிலை எதிர்வுகூறல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடல்களின் எண்ணிக்கை 13.2.2 தயாரிக்கப்பட்ட எதிர்வுகூறல்களின்	* 20%		

	காலநிலை எதிர்வுகூறல்களை (நிகழ்வு / அவதானிப்பு) வழங்குதல் 13.2.b பருவகால எதிர்வுகூறல்களை வழங்குதல் 13.2.c தடையற்ற எதிர்வுகூறல்களை வழங்குதல்	எண்ணிக்கை			
	13.3 காலநிலை மாற்றங்களைக் குறைத்தல், தழுவிக் கொள்ளல், தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கைகள் தொடர்பாக கல்வி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மனித மற்றும் நிறுவன இயலளவுகளை அதிகரித்தல் 13.3.a காலநிலை மாற்றத் தாக்கங்களைத் தணித்தல் மற்றும் தழுவிக் கொள்ளல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் 13.3.b வானிலை, காலநிலை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக உத்தியோகத்தர்களின் இயலளவை அதிகரித்தல் 13.3.c ஆபத்து அடையாளம் காணலை	13.3.1 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 13.3.2 இயலளவு அதிகரிக்கும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	* 20%		

	மேம்படுத்தல் 13.3.d ஆபத்து வரைபடமாக்கலை மேம்படுத்தல்				
	13. B மிகக் குறைவாக அபிவிருத்தியடைந்த நாடுகள் மற்றும் சிறிய தீவுகளில் உள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள பெண்கள், இளைஞர்கள் மற்றும் உள்ளூர் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்களை மையப்படுத்தி செயற்றிறனான காலநிலை மாற்றம் தொடர்பான இயலளவு விருத்திக்கான பொறிமுறைகளை மேம்படுத்தல் 13.B.a தேசிய தகவமைப்பு திட்டத் தயாரிப்புகளில் ஈடுபடுதல் 13.B.b தேசிய ரீதியாக தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளில் ஈடுபடுதல் 13.B.c வித்தியாசமான நிலைமை நிகழ்வுகளின் கீழ் எதிர்கால காலநிலை மாற்ற எதிர்வுகூறல்களைத் தயாரிப்பதை விருத்தி செய்தல்	13.b.1 பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை 13.b.2 இயலளவு அதிகரிக்கும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 13.b2.3 தயாரிக்கப்பட்ட எதிர்வுகூறல்களின் எண்ணிக்கை	* 20%		

* 2022 இல் கொரோனா பெருந்தொற்று நிலைமையுடன் தொடர்பான ஏனைய காரணங்களாலும் நாட்டில் காணப்பட்ட அசாதாரண நிலைமைகளாலும் எவ்வித செயற்றிட்டங்களும் நடைமுறைப் படுத்தப்படவில்லை. எனவே அடைதலில் எவ்விதமான முன்னேற்றமும் இல்லை.

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் அடைவுகளும் சவால்களும்

5.2.1 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டிருப்பது 13வது அபிவிருத்தி இலக்காகும். அது 'காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்க்கக்கூடிய அவசர நடவடிக்கைகளை எடுத்தல்' என்பதாகும். காலநிலை மற்றும் அதன் தாக்கங்களை எதிர்ப்பதற்கான வளிமண்டலவியலின் பொறுப்பானது மிகவும்

முக்கியமானதாகும். இந்த இலக்குகளை அடைவதற்கான வளிமண்டலவியலின் பங்களிப்பை வகைப்படுத்துகையில் அது வளி மாசடைதல், காலநிலைத் தகவல், காலநிலை மாற்றம் மற்றும் காலநிலை எதிர்வுகூறல் என வகைப்படுத்தலாம். இவற்றுக்கு மேலதிகமாக திணைக்களமானது ஏனைய 11 இலக்குகளுடன் (இலக்கு 1,2,3,5,6,7,9,11,14,15,17) மறைமுகமாக ஈடுபடுகின்றது. திணைக்களத்திற்கான 13வது இலக்கும் தொடர்பான நோக்கங்கள், இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் பின்வருமாறு:

இலக்கு 13 – காலநிலை மாற்றங்களுக்கும் அவற்றின் தாக்கங்களுக்கும் எதிராக உடனடி நடவடிக்கை எடுத்தல்

தீர்மானம் மேற்கொள்வோருக்கு, அவர்கள் காலநிலை மாற்றத் தாக்கங்களுக்கு இசைவாக்கம் அடைவதற்கும் தம்மை காலநிலை மீளெழுச்சியாளர்களாக ஆக்கிக் கொள்வதற்குமாக விஞ்ஞானபூர்வமான உண்மைகளும் ஆய்வுகளும் வழங்கப்படுகின்றன. தேவையான தரவுகள், எதிர்வுகூறல்களை வழங்குவதன் மூலமும் ஆய்வு நடவடிக்கைகள் மூலமும் காலநிலை மாற்றங்கள் மீதான பாரிஸ் உடன்படிக்கைக்கு ஆதரவு வழங்குவதோடு தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகளுக்கிணங்க வாயு வெளியேற்றலைக் குறைக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வழிகாட்டல்கள் வழங்குவதோடு வளிமண்டலவியல் திணைக்களம் காலநிலை மாற்றம் தொடர்பான அரசாங்கங்களுக்கு இடையிலான குழுவுக்கான குவியப் புள்ளியாகச் செயற்படுகின்றது.

இலக்கு	**உள்ளூர் இலக்கு**	**உள்ளூர் குறிகாட்டிகள்**	**பங்காளர்கள்**
13. காலநிலை மாற்றம் மற்றும் அதன் தாக்கங்களை எதிர்க்கக்கூடிய அவசர நடவடிக்கைகளை எடுத்தல்	13.1 காலநிலை மாற்றம், காலநிலை மற்றும் வானிலை தொடர்பான அனர்த்தங்களுக்கு முகம் கொடுப்பதற்காக மீளெழுச்சி மற்றும் இயலளவை வலுவூட்டல் 13.1.a அதிக நம்பகத்தன்மை கொண்ட வானிலை மற்றும் காலநிலை தொடர்பான தகவல்கள், எதிர்வுகூறல்கள் மற்றும் மோசமான வானிலை எச்சரிக்கைகளை வழங்கல்	13.1.1 அனர்த்தங்களால் ஏற்படும் இறப்பு வீதம் 13.1.2 உள்ளக இடம்பெயர்ந்தோர், காணாமல் போனோர், மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோர்	அனர்த்த முகாமைத்துவ நிலையம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் சுகாதார அமைச்சு, தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

	13.1.b தாக்கத்தின் அடிப்படையிலான எதிர்வுகூறல் செயற்பாடுகளை அதிகரித்தல் 13.1.c எதிர்வுகூறல் அடிப்படையிலான நடவடிக்கை		
	13.2 தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடலில் காலநிலை மாற்ற முறைமைகளை உள்வாங்கல் 13.2.a தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடலுக்காக எதிர்கால காலநிலை எதிர்வுகூறல்களை (நிகழ்வு / அவதானிப்பு) வழங்குதல் 13.2.b பருவகால எதிர்வுகூறல்களை வழங்குதல் 13.2.c தடையற்ற எதிர்வுகூறல்களை வழங்குதல்	13.2.1 எதிர்கால காலநிலை எதிர்வுகூறல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தேசியக் கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் திட்டமிடல்களின் எண்ணிக்கை 13.2.2 தயாரிக்கப்பட்ட எதிர்வுகூறல்களின் எண்ணிக்கை	சுற்றாடல் அமைச்சு தேசிய திட்டமிடல் அமைச்சு அனர்த்த முகாமைத்துவ நிலையம் தேசிய பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு
	13.3 காலநிலை மாற்றங்களைக் குறைத்தல், தழுவிக் கொள்ளல், தாக்கங்களைக்	13.3.1 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	காலநிலை மாற்றச் செயலகம் அனர்த்த முகாமைத்துவ

	குறைத்தல் மற்றும் முன்னெச்சரிக்கைகள் தொடர்பாக கல்வி, விழிப்புணர்வை ஏற்படுத்துதல் மற்றும் மனித மற்றும் நிறுவன இயலளவுகளை அதிகரித்தல் 13.3.a காலநிலை மாற்றத் தாக்கங்களைத் தணித்தல் மற்றும் தழுவிக் கொள்ளல் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்தல் 13.3.b வானிலை, காலநிலை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக உத்தியோகத்தர்களின் இயலளவை அதிகரித்தல் 13.3.c ஆபத்து அடையாளம் காணலை மேம்படுத்தல் 13.3.d ஆபத்து வரைபடமாக்கலை மேம்படுத்தல்	13.3.2 இயலளவு அதிகரிக்கும் நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	நிலையம்
